**வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 22 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 21 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 யூலை 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுகுறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பத்து கடை குத்தகையாளர்களிடமிருந்து அறவிடப்படவேண்டிய கடை வாடகை ரூபா 173,750 ஆக இருந்த போதிலும், ரூபா 146,450 ஆக கணக்கு வைக்கப்பட்டிருந்தமையால் ரூபா 27,300 ஆன வேறுபாடொன்று நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 113,600 இனால் மிகை கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) வங்கி மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான 07 நிலையான வைப்புக்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,061,053 ஆக இருந்த போதிலும், அது ரூபா 7,092,748 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையால் ரூபா 31,695 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

(ஈ) 77877441 ஆம் இலக்கம் கொண்ட இலங்கை வங்கியின் நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டிற்குரிய ரூபா 65,384 ஆன வட்டி வருமானம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

---

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களில் 10 கணக்கு விடயங்களுக்கு உரிய ஆரம்ப மீதிகளை முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் இறுதி மீதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 4,063,127 ஆன வேறுபாடொன்று நிலவியது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

---

(அ) 2016 செப்தம்பர் 30 ஆந் திகதியளவில் ஒரு கணக்காய்வு ஐயவினாவிற்கு பதிலளிக்கப்பட்டிராததுடன், அந்த விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட கணிப்பிடப்பட முடியாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 6,700,534 ஆக இருந்தது.

(ஆ) ரூபா 962,945 தொகையான வாசிகசாலை புத்தகங்களின் பெறுமதிகளை சான்றுறுதிப்படுத்துவதற்கான விரிவான பட்டோலையொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிமீளாய்வு

---------------------

### 2.1 நிதிவிளைவுகள்

---------------------------

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,158,148 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,044,765 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

-------------------------------

#### 2.2.1 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------------------------

(அ) பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் உயர் நீதிமன்றத்தினால் அறவிடப்பட்ட ரூபா 927,934 தொகையான நீதிமன்றத் தண்டப்பணங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக நிலுவையாக காணப்பட்டது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 129 (2) (ஆ) பிரிவின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 1,993,932 தொகையான நிலுவை முத்திரைக் கட்டண வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 குத்தகை வாடகை

-------------------------------

உள்ளூராட்சி ஆணையாளரின் 1980 திசெம்பர் 31 ஆம் திகதிய 1980/46 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் கடை வாடகை 5 வருடங்களுக்கு ஒரு தடவையேனும் மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு திருத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு மதிப்பீடு செய்யப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட வாடகையினை அறவிடாமல் கூறுவிலைகள் கோரப்பட்டு சபைக்குச் சொந்தமான 10 கடைகள் மற்றும் 2 வாரச் சந்தைகள் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

### 2.2.3 வியாபார அனுமதிப்பத்திரம்

---------------------------------------------

(அ) 1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 59 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தினுள் மதிப்பாய்வொன்றினை மேற்கொண்டு வியாபார வர்த்தக பட்டியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மேலும் சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் நடாத்திச் செல்லப்படும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய வியாபார நிலையங்கள் தொடர்பிலும் சபையினால் இனங்காணலொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

--------------------------------------------------------

(அ) பேரேட்டுக் குறிப்பு பதிவேட்டிற்கமைய புதிதாக பேரேட்டு பதிவுகளை உட்புகுத்தும் போது பிரதேச சபையின் செயலாளரின் அல்லது பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரால் அதற்குரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 3,113,045 பெறுமதியினை திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 112,347 தொகையான கடன் மீதி 2013 ஆம் ஆண்டின் இறுதி முதல் முன்கொண்டு வரப்படுவதுடன், 2014 மற்றும் 2015 ஆகிய ஆண்டுகளில் அவற்றுள் எந்தவொரு தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 571 (2) மற்றும் (3) இன் பிரகாரம் காலாவதியான வைப்புக்களை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது இயலுமான அளவு விரைவாக மீளச் செலுத்தப்பட வேண்டிய போதிலும்,ரூபா 1,150,383 பெறுமதியான காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2002 யூலை 30 ஆந் திகதிய 364 (3) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதத்திலும் செலுத்தப்படும் பெறுமதிசேர் வரி (VAT) தொடர்பான விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், 2014 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,777,659 தொகையும், நடப்பாண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 2,050,327 தொகையான பெறுமதி சேர் வரி தொடர்பிலும் மேற்கூறப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

---------------------------------------------------

### 3.2.1 விளைவற்றமற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

------------------------------------------------------------------------------------

(அ) சபைக்கு சொந்தமான 04 உழவு இயந்திரங்கள் 2012 ஆம் ஆண்டு தொடக்கமும், ஜீப் வண்டியொன்று 2013 ஆம் ஆண்டு தொடக்கமும், டிப்பர் வண்டியொன்றும் பவுசர் வண்டியொன்றும் 2014 ஆம் ஆண்டு தொடக்கமும், 1996 யூன் 12 ஆந் திகதி கிடைத்திருந்த மோட்டார் சைக்கிளொன்று நீண்ட காலமாகவும் குறைப்பயன்பாட்டுடன் தரித்து வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் போது சபைக்கு சொந்தமான 4 கடை அறைகளை முறையே 8 முதல் 12 மாதங்கள் வரையான காலமாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு இழப்பான வருமானம் ரூபா 61,500 ஆகும்.

### 3.2.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

------------------------------------------------------

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் 02/2014 இன் 3.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டினதும் பெப்ரவரி 26 ஆந் திகதிக்கு முன்னர் பற்றாக்குறைகள் மற்றும் மிகைகளின் அறிக்கைக்கமைய அழிக்க வேண்டிய பொருட்களை அழித்தல், பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருட்களை

பழுதுபார்த்தல் மற்றும் ஏலமிடக்கூடிய பொருட்களை ஏலமிட்டு முடிப்பதற்கு வேண்டிய போதிலும், பிரதேச சபையால் 2014 ஆம் ஆண்டில் அவ்வாறு தீர்மானிக்கப்பட்ட 31 பொருட்கள் தொடர்பிலும் 2015 ஆம் ஆண்டின் போது 17 பொருட்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

### 3.3.1 இரட்டபெரியகுளம் முதலாம் குறுக்கு வீதியில் கொங்கிறீட் பாதையை நிர்மாணித்தல்

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த வீதியின் நீளம் 70 மீட்டர்கள் கொங்கிறீட் இட்டு தயார்படுத்தவதற்கு பிடிகாசுடன் ரூபா 596,481 தொகை ஒப்பந்த நிறுவனமொன்றிற்கு 2016 சனவரி 25 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அந்த வீதியில் கொங்கிறீட் இடுவதற்கு முன்னர் இரு புறமும் கொங்கிறீட் நடைபாதையொன்றை இட வேண்டியபோதிலும், அவ்வாறு இடப்படாமல் முன்வைக்கப்பட்டிருந்ததாக 2016 யூன் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. நிதிப் பற்றாக்குறையாக இருந்ததாக சபையின் செயலாளர் குறிப்பிட்டிருந்த போதிலும், அதன் மூலம் வீதியின் நிலைத்த தன்மைக்கும் ஆயட்காலத்திற்கும் தாக்கமேற்படுமென அவதானிக்கப்பட்டது.

### 3.3.2 இரட்டபெரியகுளம் இரண்டாவது குறுக்கு வீதியின் முதலாவது வீதிக்கு தாரிடல்

------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்த வீதியின் 60 மீட்டர் நீளமான தூரத்தை கற்களைப் பரப்பி தாரிடுவதற்காக ரூபா 263,495 இற்கு 2015 நவம்பர் 26 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு ரூபா 243,871 தொகை ஒப்பந்ததாரருக்கு 2016 சனவரி 13 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. அந்த வீதியின் 25 மீட்டர் தூரமான அளவு அகலமாக்காமல் குறுகியதாக ஓரங்களின்றி இருந்தமையால் வீதியின் இரு மருங்கிலும் கழுவிச் செல்லப்பட்டிருந்தாக 2016 யூன் 02 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்டது.

### 3.3.3 இரட்டபெரியகுளம் முதலாவது குறுக்கு வீதிக்கு தாரிட்டு நிர்மாணித்தல்

-----------------------------------------------------------------------------------------------------------

இந்த வீதியின் 270 நீளத்தினை கற்கள் பரப்பி தாரிடுவதற்கு ரூபா 1,260,000 இற்கு 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திட்டு ரூபா 1,778,774 தொகை ஒப்பந்ததாரருக்கு 2015 ஒக்தோபர் மாதத்தின் போது செலுத்தப்பட்டிருந்தது. இந்த வீதியின் மருங்குகளுடன் மொத்த அகலம் 5.20 மீட்டர் அகலம் மற்றும் தாரிடப்பட்ட பகுதியின் அகலம் 3.7 மீட்டராக இருக்க வேண்டிய போதிலும், வீதியின் ஒரு இடத்தை 2016 யூன் 02 ஆந் திகதி பரிசோதித்து பெற்றுக்கொண்ட அளவீடுகளின் பிரகாரம் ஒரு மருங்கின் அகலம் 0.625 மீட்டராகவும், தாரிடப்பட்ட பகுதியின் அகலம் 3.55 மீட்டர்களாகவும் இருந்தது. அதன் பிரகாரம், ஒரு மருங்கின் அகலம் 0.125 மீட்டர் குறைவாகவும் தாரிடப்பட்ட பகுதியின் அகலம் 0.15 மீட்டர்கள் குறைவாகவும் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. மேலும், மருங்குகளுக்காக ரூபா 8,640 (67.5m*ரூபா 128) தொகையும், தாரிடப்பட்ட பகுதிக்காக ரூபா 37,825 (40.5m*ரூபா 933.95 ) தொகையும் கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

-----------------------------------------------------

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2012 சனவரி 13 ஆந் திகதிய DMA/2012/101 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்காக கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் கட்டமைப்பொன்றினுள் (CIS) உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென வழிகாட்டி மற்றும் வினாக்கோவையில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேடகவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) உள்ளகக் கணக்காய்வு